

தனி பிரதி
ரூ.10/-

PORIYIYAL KADHIR



# பொறியியல் கதிர்

கதிர் 46 | பாரிப்பு 4 | திருவள்ளுவர் ஆண்டு 2045 | மார்ச் 2015



## மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு ஒரு பணிவான வேண்டுகோள்.

பொதுப்பணித்துறையில் பட்டயப் பொறியாளர்களுக்கும், பகுதிநேர பட்டம் பயின்ற பொறியாளர்களுக்கும் சாதகமாக உள்ள பல்வேறு அரசாணைகளுக்கு விதித்திருத்தம் (Rule Amendment) வழங்கப்படாமல் தாமதபடுத்தபட்டு வருவதால் சம்பந்தப்பட்டவர்கள் மிகுந்த பாதிப்புக்கு உள்ளாகி வருகிறார்கள். எனவே விதித்திருத்தம் வழங்கப்படாத அரசாணைகளுக்கு உரிய விதித்திருத்தம் வழங்க ஆவண செய்யுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

- தமிழ்நாடு பொறியியல் சங்கம்.

நூற்றாண்டு விழா சங்கம் - A CENTENARY ASSOCIATION

தோற்றம் 1910

தமிழ்நாடு பொறியியல் சங்கம்
பொதுப்பணித்துறை
சேப்பாக்கம், சென்னை - 600 005.

நூற்றாண்டு 2010

அரசு ஆணை எண்: Ms. 822 நாள். 27.09.1928 அங்கீகரிக்கப்பட்டது

TAMILNADU ENGINEERING ASSOCIATION - PWD
CHEPAUK, CHENNAI - 600 005.

# 31.01.2015 அன்று காஞ்சிபுரத்தில் நடைபெற்ற மைய செயற்குழுக் கூட்ட நிகழ்வுகள்.






## பொதுச் செயலாளர் மடல்



### மடல் - 4 (2014 - 2015)

# தொடரும்
# நம் பயணம் .......

**அன்பார்ந்த பொறியாளர் சகோதர, சகோதரிகளே! வணக்கம்!**

26.02.2006 அன்று அரசு ஆணை எண். 1-ன் படி 21 தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு உதவிப் பொறியாளர் பதவி உயர்வு அளிக்கப்பட்டது. அவர்களை மீண்டும் தொழில்நுட்ப உதவியாளர்களாக பதவி இறக்கம் செய்யவேண்டும் என்று மாற்றுச்சங்கம் தொடுத்த வழக்கின் மேல்முறையீட்டு வழக்கில் சங்கம் சார்பாக பிரதிவாதியாக இணைந்துள்ளோம். இந்த வழக்கின் விசாரணை கடந்த 26.02.2015 அன்று விசாரணைக்கு வந்து 03.03.2015 அன்றைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தலைமைப் பொறியாளர் (பொது) அலுவலகத்தில் பல்வேறு கோப்புகள் தாமதமாகி வருகிறது. பட்டயம் முடித்த பணி ஆய்வாளர்களுக்கு தொழில்நுட்ப உதவியாளர் பதவி உயர்வு அளிக்கும் கோப்பின் மீது சில விவரங்கள் கேட்டு அரசிடமிருந்து தலைமைப் பொறியாளர் (பொது) அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டு பல மாதங்கள் ஆகியும் அரசுக்கு பதில் அனுப்பப்படவில்லை. அதைப் போலவே இளநிலைப் பொறியாளர் / தொழில்நுட்ப உதவியாளகளாக பணி புரிந்து பணிநீக்கம் செய்யப்பட்டு மீண்டும் மறுபணி அமர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணியிடைக்காலம் பிழை பொறுத்தல் கோப்பும் [Break in Condonation] அரசிடமிருந்து விவரங்கள் கேட்கப்பட்டு பல மாதங்கள் ஆகியும், தலைமைப் பொறியாளர் (பொது) அலுவலகத்தில் தேவையற்ற கால தாமதம் ஏற்படுத்தி வந்தார்கள். இந்த இரண்டு கோப்புகளையும் மார்ச் முதல் வாரத்தில் அரசுக்கு அனுப்பிவிடுவதாக இணைத்தலைமைப் பொறியாளர் (பொது) அவர்கள் உறுதி அளித்துள்ளார்.

154 இளநிலைப் பொறியாளர்களின் பணிவரன்முறை, 24 (19+5) மின்னியல் இளநிலைப் பொறியாளர்களின் பணிவரன்முறை, 57 உதவிப் பொறியாளர்களின் பணிவரன்முறை பகுதிநேர பட்டம் பயின்ற இளநிலைப் பொறியாளர்களுக்கு உதவிப் பொறியாளர் பதவி பெயர் மாற்றம் வழங்குவது ஆகியவையும் காலதாமதம் ஆகிவருகிறது. இதையும் விரைவில் முடித்து தருவதாக உறுதி அளித்துள்ளார்கள்.

இத்துடன் இந்த மடலை நிறைவு செய்கிறேன். மீண்டும் அடுத்த மடலில் சந்திப்போம். நன்றி.

**வாழ்க தமிழ்நாடு பொறியியல் சங்கம்**
**வளர்க பொறியாளர்களின் சங்க உணர்வு**
**தேச நலன் காப்போம்.**

**D. முருகேசன்,** பொதுச் செயலாளர்
செல்பேசி எண் 9444 999 588, 988 444 98 97
E.mail: d.murugavelsivan@gmail.com



(த. முருகேசன்)
பொதுச் செயலாளர்

**தமிழ்நாடு அரசு**
**பொதுப்பணித்துறை**

அனுப்புநர்
பொறி. சு. திருமாறன், எம்.இ.,
முதன்மை தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து.,
மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது)
பொபது., சேப்பாக்கம், சென்னை - 5

பெறுநர்
திரு. D. முருகேசன்,
பொதுச் செயலாளர்,
தமிழ்நாடு பொறியியல் சங்கம், பொ.ப.து.,
சென்னை - 5.

**கடித எண். எஸ். 1(2) / 23724 / 2015 / நாள். 11.02.2015.**

அய்யா,

| | | | |
|---|---|---|---|
| 1. | முதலமைச்சரின் தனிப்பிரிவு மனு எண் மற்றும் நாள் | :: | F / 9928 / CH / 2015, நாள். 17.01.2015. |
| 2. | மனுதாரரின் பெயர் மற்றும் முகவரி | :: | திரு. D. முருகேசன், பொதுச் செயலாளர், தமிழ்நாடு பொறியியல் சங்கம், பொ.ப.து., சென்னை - 5. |
| 3. | கோரிக்கை விவரம் | :: | விதித்திருத்தம் வழங்க கோருதல் - குறித்து |
| 4. | மேற்கொண்ட நடவடிக்கை பற்றிய விவரம் | :: | அரசாணை நிலை எண். 1 பொதுப்பணி (பி-2) துறை, நாள் 10.01.1990-ல் தொழில்நுட்ப உதவியாளர்கள் 5 வருட பணி முடித்த நிலையில் உதவிப் பொறியாளர்களாக ஊட்டு பதவியாக வழங்க கோரும் விதித்திருத்தம் குறித்தான கருத்துரு அரசுக்கு அனுப்பப்பட்டு அரசின் பரிசீலினையில் உள்ளது. |
| 5. | மனுதாரருக்கு அனுப்பி வைக்கப்பட்ட பதிலின் சுருக்கம் | :: | கலம் 4-ல் தெரிவித்துள்ளபடி |
| 6. | கோரிக்கை ஏற்கப்பட்டதா? (அ) நிராகரிக்கப்பட்டதா? | :: | ஏற்கப்பட்டது. |
| 7. | கோரிக்கை நிராகரிக்கப்பட்டிருப்பின் அதற்கான காரணங்கள் | :: | |

சு. திருமாறன்,
முதன்மை தலைமைப் பொறியாளர், நீஆது.,
(ம) தலைமைப் பொறியாளர் (பொது)

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

கண்காணிப்பாளர்

## நன்கொடை

தமிழ்நாடு பொறியியல் சங்கம் மாநிலத் தலைவர் பொறியாளர் எம். பஞ்சவர்ணம், உதவி செயற்பொறியாளர் அவர்கள் சிறப்பு வழக்கு நிதியாக ரூ. 1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) மையச்சங்கத்திற்கு வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் முன்னாள் பொதுச் செயலாளர் பொறியாளர் சி.ப.சண்முகம், உதவி செயற்பொறியாளர் (ஓய்வு) அவர்கள் சிறப்பு வழக்கு நிதியாக ரூ.1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) மையச்சங்கத்திற்கு வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் முன்னாள் மாநிலத் தலைவர் பொறியாளர் ஜி.விஜயகுமாரன், உதவி செயற்பொறியாளர் அவர்கள் சிறப்பு வழக்கு நிதியாக ரூ. 2000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) மையச்சங்கத்திற்கு வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் அமைப்பு மற்றும் சட்டச் செயலாளர் பொறியாளர் எஸ். கண்ணன், உதவிப் பொறியாளர் அவர்கள் சிறப்பு வழக்கு நிதியாக ரூ. 1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) மையச்சங்கத்திற்கு வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் மைய மண்டல செயலாளர் பொறியாளர் எஸ்.லீலாவதி, உதவி செயற்பொறியாளர் அவர்கள் சிறப்பு வழக்கு நிதியாக ரூ. 3000/- (ரூபாய் மூன்றாயிரம் மட்டும்) மையச்சங்கத்திற்கு வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் தெற்கு மண்டல செயலாளர் பொறியாளர் பி.சசிகுமார், உதவி செயற்பொறியாளர் அவர்கள் சிறப்பு வழக்கு நிதியாக ரூ. 1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) மையச்சங்கத்திற்கு வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் வடக்கு மண்டல செயலாளர் பொறியாளர் டி. சந்திரன், இளம் பொறியாளர் அவர்கள் சிறப்பு வழக்கு நிதியாக ரூ. 1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) மையச்சங்கத்திற்கு வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் முன்னாள் பொதுச் செயலாளர் பொறியாளர் என்.வெங்கட்ராமன், உதவி செயற்பொறியாளர் (ஓய்வு) அவர்கள் சிறப்பு வழக்கு நிதியாக ரூ. 1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) மையச் சங்கத்திற்கு வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் கோயம்பத்தூர் கிளை தலைவர் பொறியாளர் எஸ்.பொன்னுசாமி, உதவி செயற் பொறியாளர் அவர்கள் சிறப்பு வழக்கு நிதியாக ரூ.1000/ (ரூபாய் ஆயிரம் மட்டும்) மையச்சங்கத்திற்கு வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சேலம் கிளை உறுப்பினர் பொறியாளர் எம்.சிவராமன், இளம் பொறியாளர் அவர்கள் சிறப்பு வழக்கு நிதியாக ரூ. 1500/- (ரூபாய் ஆயிரத்து ஐநூறு மட்டும்) மையச்சங்கத்திற்கு வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சென்னை கிளை உறுப்பினர் பொறியாளர் எம்.சம்பத்குமார், உதவிப் பொறியாளர் (மின்) அவர்கள் சிறப்பு வழக்கு நிதியாக ரூ. 100/- (ரூபாய் நூறு மட்டும்) மையச்சங்கத்திற்கு வழங்கியுள்ளார்.

அனைவருக்கும் தமிழ்நாடு பொறியியல் சங்கம் தனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

## இரங்கல் செய்தி

திருச்சி கிளை உறுப்பினர் பொறியாளர் என். கந்தசாமி, பணி ஆய்வாளர் அவர்களின் தாயார் திருமதி. என். கனகாம்பாள் அவர்கள் 08.02.2015 அன்று இயற்கை எய்தினார்.

இழப்பால் வாடும் இதயங்களுக்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

# பிப்ரவரி 2015 மாத பொறியாளர் இதழில் இருந்து

**கடித எண். 001 / பொ.செ. - பொ.ச. / 2015-68 நாள்: 03.02.2015**

பெறுநர்
மாண்புமிகு தமிழக முதல்வர் மற்றும்
பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள்,
தலைமைச் செயலகம், சென்னை - 600 009.

**பெருமதிப்பிற்குரியீர்,**

**பொருள்:** தமிழ்நாடு பொதுப்பணித்துறை - நிறுவனம் - அரசாணை எண். 1 பொதுப்பணித்துறை நாள்: 02.01.1990 - தமிழ்நாடு பொறியியல் சார்நிலைப் பணிகளுக்கான திருத்தம் - எதிர்ப்பு தெரிவித்தல் - தொடர்பாக.

**பார்வை:** அரசாணை (நிலை) எண். 1 (பொ.ப.து.) நாள் 02.01.1990.

தமிழ்நாடு பொறியியல் பணித்தொகுதி (TNES) மற்றும் தமிழ்நாடு பொறியியல் சார்நிலைப் பணித்தொகுதி (TNESS)களுக்கான சிறப்பு விதிகளில் 3:1 என்ற விகிதத்தில் பட்டப் பொறியாளர்கள் உதவிப் பொறியாளர்களாகவும், பட்டயப் பொறியாளர்கள் இளநிலைப் பொறியாளர்களாகவும், பிரிவு நிலையில் நியமிக்கப்பட வேண்டும் என வரையறுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பொறியியல் பணித்தொகுதி சிறப்பு விதிகளின்படி, பணியில் இருக்கும்பொழுது பட்டப் படிப்பு முடித்த தலைமை வரைவாளர் மற்றும் வரைவாளர் நிலை 1 (தற்பொழுது முதுநிலை வரைதொழில் அலுவலர்) ஆகிய பதவிகளே உதவிப் பொறியாளர் பணியிடங்களுக்கான ஊட்டுப் பதவிகளாக (Feeder Category) வரையறுக்கப்பட்டுள்ளது. இதற்கான விதித்திருத்தம் அரசாணை எண். 31 பொ.ப.து. நாள் 06.01.1983 ல் வெளியிடப்பட்டுள்ளது).

பொதுப்பணித்துறையில் உள்ள இளநிலைப் பொறியாளர் பதவிக்கு ஊட்டுப் பதவிகளாக வரை தொழில் அலுவலர், தொழில்நுட்ப உதவியாளர் மற்றும் ஓவர்சியர் ஆகிய மூன்று பதவிகளுக்கும் வரையறுக்கப்பட்டுள்ளது. அரசாணை எண். 3037 பொதுப்பணித்துறை நாள். 22.12.1986ன் படி தொழில்நுட்ப உதவியாளர் பதவி, இளநிலைப் பொறியாளர் பதவிக்கான ஊட்டுப் பதவியாகும் என்று தமிழ்நாடு பொறியாளர் சார்நிலைப் பணித்தொகுதிக்கு விதித்திருத்தம் வழங்கப்பட்டுள்ளது.

தற்பொழுதுள்ள தமிழ்நாடு பொறியியல் பணி விதிகளின் படி உதவிப் பொறியாளர் பதவிக்கான பணிநியமனங்களில் பட்டப் பொறியாளர்கள் நேரடி நியமனம் முதலாவது முறையாகவும், பணிமாற்றல் மூலமான நியமனம் கடைசி முறையாகவும் பின்பற்றப்படுகின்றன. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நேரடி தேர்வு நியமன முறையின் படி பட்டம் பெற்ற பொறியாளர்கள் எழுத்துத் தேர்வு (பொறியியல் பாடம் மற்றும் பொது அறிவு), நேர்முக தேர்வு ஆகியவற்றின் தேர்வு பெற்று பின் தமிழக அரசின் சமூக நீதி கொள்கையான இட ஒதுக்கீட்டின் (Communal Reservation) அடிப்படையில் உதவிப் பொறியாளர் பதவிகளுக்கு தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

இந்நிலையில், விதிகளுக்கு முற்றிலும் புறம்பாக அரசாணை எண். 1 பொ.ப.து நாள் 02.01.1990ன் படி, இளநிலைப் பொறியாளர் பதவிக்கான ஊட்டுப் பதவியான தொழில்நுட்ப உதவியாளர் பதவியை உதவிப் பொறியாளர்களின் ஊட்டுப் பதவியாக பணிமாற்றல் மூலம் நியமனம் செய்ய ஆணையிடப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப உதவியாளர் பதவியிலிருந்து உதவிப் பொறியாளர் பதவிக்கு பணி மாறுதல் மூலம் நியமனம் செய்யும்போது அரசின் இட ஒதுக்கீடு கொள்கை முற்றிலும் பின்பற்றப்படுவதில்லை.

மேற்படி அரசாணையின் மூலம் பட்டப் பொறியாளர்களின் பணி நலன்கள் பெரிதும் பாதிக்கப்படுவதானால், எங்கள் சங்கம் ஆரம்பத்திலிருந்து எதிர்ப்பு தெரிவித்து வருகின்றது. மேற்படி அரசு ஆணைக்கு இது காணும் துறை விதிகளில் மாற்றம் ஏதும் செய்யப்படவில்லை. இருப்பினும், விதிகளுக்கு புறம்பாக பல்வேறு காலகட்டங்களில் உதவிப் பொறியாளர்களாக மேற்படி அரசாணை எண். 1ன் மூலம் பணி மாற்றல் மூலம் பணி நியமனங்கள் நடைபெற்று வருகின்றன.

இப்படி விதிமுறைகளை மீறி நியமனம் செய்வதை நிறுத்திட வேண்டி நாங்கள் முதன்மை தலைமைப் பொறியாளர், அரசு செயலர் பொதுப்பணித்துறை அவர்களிடம் பல்வேறு கால கட்டங்களில் எங்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளோம். எனினும் பல்வேறு சூழ்நிலைகளில் பட்டப் பொறியாளர்கள் உரிமையினை பாதிக்கும் வகையில் தொழில்நுட்ப பணியாளர்கள் பணி மாறுதல் மூலம் உதவிப் பொறியாளர்களாக நேரடி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இவற்றினை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண். WP No. 6744 / 2014 தொடுக்கப்பட்டுள்ளது என்பதனை தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்நியமனங்களின் மூலம் பட்டப் பொறியாளர்களின் பணி நலன்கள் கீழ்கண்டவாறு பாதிக்கப்படுகின்றன.

I. மேற்படி பணிமாறுதல் மூலம் தொழில்நுட்ப பணியாளர்கள் உதவிப் பொறியாளர்களாக நியமிக்கும் பொழுது அரசின் சமூக நீதிக் கொள்கையான இட ஒதுக்கீடு (Communal Reservation) பின்பற்றப்படுவதில்லை. இதனால், இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டம் பெற்ற உதவிப் பொறியாளர்களின் உரிமைகள் பறிக்கப்படுகின்றன.

ii. தமிழகத்தின் தற்பொழுதுள்ள சுமார் 500க்கும் மேற்பட்ட பொறியியல் கல்லூரிகளில் சுமார் 50,000 பேர் வருடா வருடம் சிவில் இன்ஜினியரிங் பிரிவில் பட்டம் பெற்று வேலை வேண்டிக் காத்துக் கொண்டுள்ளனர். இச்சூழலில் இதுபோன்ற பணிநியமனங்கள் பட்டதாரி பொறியாளர்களின் அடிப்படை நலன்களையும், நியாயமான உரிமைகளையும் பறிப்பதாகும்.

III. பகுதி நேர பட்டம் பெற்று பணி மாற்றல் மூலம் எவ்வித தேர்வுமின்றி உதவிப் பொறியாளர்களாக பணி நினமனம் பெறுவதனால், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் நேரடி நியமனம் பெறும் உதவிப் பொறியாளர்களின் முதுநிலை முற்றும் பாதிக்கப்படும்.

IV. பட்டப் பொறியாளர்களுக்கே உரித்தான பணி விதிமுறைகளில் வரையறுக்கப்பட்டுள்ள 3:1 என்ற பணி நியமன விகிதாச்சாரம் முற்றிலுமாக மீறப்படுகின்றது.

மாண்புமிகு உச்சநீதிமன்றம் கடந்த 27.11.2013 அன்று வழங்கிய தீர்ப்பில், பகுதிநேர பட்டம் பயின்ற இளநிலை பொறியாளர்கள் உதவிப் பொறியாளர் பதவி பெயர்

மாற்றம் பெற்றுக் கொள்ளலாம் எனவும், உதவிப் பொறியாளர் பதவிக்கான ஊதியம் பெற்றுக் கொள்ளலாம் எனவும், ஆனால் இளநிலைப் பொறியாளருக்குரிய 25% விகிதாச்சாரத்தில் உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு பெறுவதுதான் சரியாக இருக்கும் என கருத்து தெரிவித்துள்ளார்கள்.

மேற்படி, உச்சநீதிமன்ற கருத்திற்கிணங்க, அரசாணை எண்.66 பொ.ப.து. நாள் 12.3.2007ஐ, எதிர்த்து தொடுக்கப்பட்ட வழக்கில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம், தமிழ்நாடு பொறியியல் சார்நிலைப் பணித்தொகுதியின் கீழ்வரும் இளநிலைப் பொறியாளர்கள் பட்டம் பெற்று உதவிப் பொறியாளர்களாக பதவி பெயர் மாற்றம் பெற்றுக் கொண்டாலும், இளநிலைப் பொறியாளர்களுக்குரிய முதுநிலையிலேயே வைக்கப்பட வேண்டும் என்றும், இளநிலை உதவிப்பொறியாளர்களுக்குரிய 25% விகிதத்தில் உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு அளிக்கப்படவேண்டும் எனவும், தமிழ்நாடு பொறியியல் பணித்தொகுதியில் கீழ் வரும் உதவிப் பொறியாளர்களின் 75% விகிதத்தில் பதவி உயர்வு அளிக்கப்பட கூடாது எனவும் ஆணையிட்டுள்ளனர்.

இளநிலைப் பொறியாளர் பதவிகளுக்கு ஊட்டுப் பதவிகளான தொழில்நுட்ப உதவியாளர் பணியிடம், உதவிப்பொறியாளர் பதவிக்கான ஊட்டுப் பதவியாக ஆணையிட்டு வழங்கிய அரசாணை எண்.1 பொ.ப.து.நாள் 02.01.1990, மேற்கூறிய மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம், மற்றும் உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பிற்கு முற்றிலும் புரம்பானது.

எனவே, மேற்கூரிய காரணங்களை கருத்தில்கொண்டு, பட்டப் பொறியாளர்களின் அடிப்படை உரிமைகளை பாதுகாத்திட தமிழ்நாடு பொறியியல் சார்நிலைப் பணித்தொகுதி விதிகளுக்கு விதித்திருக்கும் வழங்கக்கூடாது எனவும் இதற்கு மூலக் காரணமாக இருக்கும் அரசாணை எண்.1 பொ.ப.து. நாள் 02.01.1990ஐ முழுவதுமாக ரத்து செய்யுமாறும் மாண்புமிகு தமிழக முதல்வர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களை மிகப்பெரிதும் வேண்டுகின்றோம்.

நன்றி

இப்படிக்கு,

| | |
|---|---|
| பொறி. பெ.கார்த்திக்கேயன், | பொறி. ர. ரவிராஜ், |
| பொதுச்செயலாளர்/உதவிப்பொறியாளர் சங்கம் | பொதுச்செயலாளர்/பொறியாளர் சங்கம் |

**நகல் :** அரசு முதன்மை செயலாளர், பொதுப்பணித்துறை,தலைமைச் செயலகம், சென்னை-9 அவர்களின் கனிவான கவனத்திற்கும், மற்றும் தக்க நடவடிக்கைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**நகல் :** முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சேப்பாக்கம், சென்னை - 5. அவர்களின் கனிவான கவனத்திற்கும், மற்றும் தக்க நடவடிக்கைக்கு சமாப்பிக்கப்படுகிறது.

**Lr. No. 001 /GS - AOE / 2015 - 70** **Date : 02.02.2015**

To

The Principal Secretary to Government,

Public Works Department,

Fort St.George,

Chennai - 600 009.

Sir,

**Sub:** Implementation of Orders of the Hon'ble High Court of Madras dated.15.10.2014 in W.P. Nos. 34276, 14865 and 24783 of 2007 - re quested - regarding.

**Ref:** 1. The orders of the Hon'ble High Court of Madras dated 15.10.2014 in Writ Petition Nos. 34276, 14865 and 24783 of 2007.

2. The orders of the Hon'ble Supreme Court of India dated 27.11.2013 in B. Thirumal Vs. Ananda Sivakumar and others in C.A. Nos. 10660 - 62 of 2013.

3. Our representation Lr. No. 001 / GS - AOE / 2014 - 59 dated.25.11.2014.

We invite your kind attention to our representation 3rd cited wherein, we have submitted the following for your kind reference The Hon'ble High Court was pleased to dispose of the Writ petition Nos. 34276, 14865 and 24783 of 2007 regarding G.O. Ms. No. 66 PWD dated 12.03.2007 by ordering as hereunder.

(i) The Junior Engineers, coming under Tamilnadu Engineering Subordinate Service, re-designated as Assistant Engineers from the date of their acquiring B.E. degree shall continue to be under the category of Junior Engineer and such re-designation shall not amount to appointment as Assistant Engineers and should be considered to continue under Tamilnadu Engineering Subordinate Service (TNESS) only and accordingly, their promotion, (i.e., recruitment by transfer, as Assistant Executive Engineer) shall be made within the 25% quota available for Junior Engineer of TNESS and not within the 75% quota earmarked for Assistant Engineers of Tamilnadu Engineering Service (TNES);

(ii) The decision of the Hon'ble Supreme Court 2nd referred above protects only the re-designated Assistant Engineers who were wrongly promoted as Assistant Executive Engineer earlier within the 75% quota earmarked for Assistant Engineers of Tamilnadu Engineering Service before the date of judgement of the Hon'ble Supreme Court from demotion and their seniority had not been dealt by the Hon'ble Supreme Court and hence the Government shall have to revise the inter se seniority, i.e., in the promoted category of Assistant Executive Engineer based on the ratio laid down by the Hon'ble Supreme Court.

2. We submit that the ratio laid down by the Hon'ble Supreme Court in the Judgment 2nd cited is that a re-designated Assistant Engineer shall continue to be Junior Engineer in Tamilnadu Engineering Subordinate Service and such re-designated Assistant Engineers shall be considered for promotion as Assistant Executive Engineer only within the quota of 25% earmarked for Junior Engineers of TNESS.

3. We submit that accordingly, the re-designated Assistant Engineers shall not be considered for inclusion in the seniority list for the category of Assistant Engineer and such re-designated Assistant Engineers shall be included only in the seniority list of Junior Engineers.

4. We further submit that the Hon'ble High Court have now ordered in the reference 1st cited above, to revise the seniority of re-designated Assistant Engineers promoted as Assistant Executive Engineer considering them within the 75% quota earmarked for Assistant Engineers of Tamilnadu Engineering Service and publish the seniority of Assistant Executive Engineers within 6 months based on the ratio laid down by the Hon'ble Supreme Court. The ratio laid down by the Hon'ble Supreme Court as stated supra, is that the re-designated Assistant Engineers shall be considered for promotion only within 25% quota earmarked for Junior Engineers. The Hon'ble High Court have categorically held that the Hon'ble Supreme Court have not dealt the seniority of the re-designated Assistant Engineers promoted already as Assistant Executive Engineers and hence the Government is bound to revise the seniority of Assistant Executive Engineers based on the ratio laid down by the Hon'ble Supreme Court. It is well settled law that any promotion in violation of rules will not confer any right to seniority. Therefore, the seniority of Assistant Executive Engineers shall be revised treating both the re-designated Assistant Engineers who were wrongly promoted as Assistant Executive Engineers within 75% quota and the Junior Engineers who were promoted (recruitment by transfer) as Assistant Executive Engineers already, i.e., before 27.11.2013 as Junior Engineers only and fitting them within 25% quota and fitting the Assistant Engineers from Tamilnadu Engineering Service within 75% quota and publish the seniority list of Assistant Executive Engineers so revised within 6 months as directed by the Hon'ble Court.

5. We, therefore, submit that the re-designated Assistant Engineers who were promoted within the quota of 75% earmarked for Assistant Engineers of Tamilnadu Engineering Service shall not be entitled to be considered for promotion as Executive Engineer until he becomes eligible on his turn within the quota of 25% earmarked for Junior Engineers according to their original seniority in the category of Junior Engineer.

Therefore, for the reason stated above, we kindly request that-

(i) The re-designated Assistant Engineers already promoted as Assistant Executive Engineers within the quota of 75% earmarked for Assistant Engineers of Tamilnadu Engineering Service and the Junior Engineers promoted (recruitment by transfer) as Assistant Executive Engineers earlier to 27.11.1013, the date of Judgement of the Hon'ble Supreme Court referred 2nd above be fitted within the 25% quota earmarked for Junior Engineers and accordingly revise the seniority in the caregory of Assistant Executive Engineers duly fixing the inter se seniority between Assistant Executive Engineers promoted from Assistant Engineers of Tamilnadu Engineering Service and the Assistant Executive Engineers appointed by recruitment by transfer from the Junior Engineers and from the re-designated Assistant Engineers as directed by the Hon'ble High Court following the ratio laid down by the Hon'ble Supreme Court as aforesaid;

(ii) The panel of Assistant Engineers / Junior Engineers fit for promotion / appointment by recruitment by transfer as Assistant Executive Engineers approved after 27.11.2013 be revised by reverting the excess Junior Engineers / re-designated Assistant Engineers as per the ratio laid down by the Hon'ble Supreme Court;

(iii) The Assistant Engineers re-designated from Junior Engineers should not be considered for promotion as Assistant Executive Engineers within the 75% quota of vacancies earmarked for Assistant Engineers in Tamilnadu Engineering Service but to consider them only within the 25% quota earmarked for Junior Engineers in the ensuring panel for promotion Asst. Executive Engineers.

(iv) The re-designated Assistant Engineers already promoted as Assistant Executive Engineers within the 75% quota of Assistant Engineers in Tamilnadu Engineering Service earlier to 27.11.2013 should not be promoted further as Executive Engineers till the publication of seniority list of Assistant Executive Engineers as aforesaid under item no.(i) above.

Thank You,

Yours,

| Er. P. Karthikeyan | Er. R. Raviraj |
|---|---|
| General Secretary / AEA | General Secretary / AOE |

Copy to the Engineer-in-Chief, WRO and Chief Engineer (General), PWD, Chepauk, Chennai - 600 005 for information and necessary action.

---

மாவீரன் நெப்போலியனிடம் ஓடிவந்தான் அந்த வீரன்.

"அரசே! தங்களுக்கு மகிழ்ச்சிதரத்தக்க செய்தி ஒன்றைக் கொண்டு வந்துள்ளேன். சொல்லட்டுமா? " என்றான். நெப்போலியன் சிரித்தான்.

"வீரனே! நான் துன்பப்படும்படியாக ஏதேனும் செய்தி இருந்தால் முதலில் அதைச் சொல், மகிழ்ச்சி தரும் செய்தியை அடுத்ததாக கேட்கிறேன்," என்றான்.

அப்போது, அந்த வீரன் பணிவுடன், "தாங்கள் இப்படி சொல்வதன் காரணத்தை தெரிந்து கொள்ளலாமா?" என்று கேட்டான்.

"வீரர்களே? வாழ்க்கை என்ற போர்க்களத்தில் நாம் இருக்கிறோம். இன்பத்தை தரும் செய்திகள் தற்காலிக சுகத்தைத் தான் கொடுக்கும். துன்பப்படும் படியான செய்திகள் தான் நமக்கு பல அனுபவங்களைக் கற்றுத்தரும். வீரமாக நடைபோட வைக்கும். எதிரிகளை எதிர் கொள்ளச் செய்யும். இன்பமான செய்திகளால் நமது திறமையை எடை போடும் விதத்தில் எதுவும் நடக்க வாய்ப்பில்லை," என்றான்.

தங்கள் தலைவனின் விளக்கம் கேட்டு, வீரர்கள் அசந்து போனார்கள். நெப்போலியனின் மாபெரும் வெற்றிக்கு காரணம் அவனது வித்தியாசமான சிந்தனைகளே! வாழ்க்கை போராட்டத்தில் நாமும் வித்தியாசமாக சிந்தித்து முன்னேறுவோம்.

# Wedding Reception Invitation

**We Cordially invite you to the reception to bless and celebrate the wedding of our son**

**Chiranjeevi: J. Prabhuraj, M.S., M.B.A.,**

(Programmer Analyst in CTS, Chennai)

with

**Sowbhagyavathi : Vedha Vetriselvan, M.S., MBA.,**

(Programmer Analyst in CTS, Chennai)

(D/o.S.Vetriselvan, Head Master)

**on Sunday 8th March 2015,**

**from 6-30 pm. onwards**

**at A.K.G. Thirumana Maligai**

**M.M. Avenue, Kanchipuram - 631 501.**

**N. Jagaraj**

Assistant Executive Engineer, PWD, WRD, Kanchipuram

**Selvakumari Jagaraj**

***With best compliments from:***

***M. Saravanan,*** *B.Sc., B.L., Advocate, Walajah*

***S.Gnanedeepa,****M.Sc.,(Nurg),M.B.A., Lecturer, Mahalakshmi College Arcot.*

***Dr. M. Arun NoyalDoss,*** *M.E., Ph.D., Asst.Professor, SRM University, Kattankulathur.*

***Er. A. Sujitha,*** *M.E., M.B.A., Asst. Engineer (H), Chengalpet*

***S. Sanjana, A. Jyoshikha, S. Santhosh Niranjan***

# 31.01.2015 அன்று காஞ்சிபுரத்தில் நடைபெற்ற மாநில செயற்குழுக் கூட்டம்

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் மாநிலச் செயற்குழுக் கூட்டம் 31.01.2015 சனிக்கிழமை காலை 10.30 மணி அளவில் காஞ்சிபுரத்தில் மாநிலத் தலைவர் பொறியாளர் எம். பஞ்சவர்ணம் அவர்கள் தலைமையில் தமிழ்த்தாய் வாழ்த்துடன் இனிதே ஆரம்பமானது.

அமைப்பு மற்றும் சட்டச் செயலாளர் பொறியாளர் எஸ். கண்ணன் அவர்கள் கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரையும் அவைக்கு அறிமுகம் செய்து வைத்தார். காஞ்சிபுரம் கிளை சார்பாக கிளைத் தலைவர் பொறியாளர் என். கிருஷ்ணன் அவர்களும், மையச் சங்கம் சார்பாக வடக்கு மண்டல செயலாளர் பொறியாளர் D. சந்திரன் அவர்களும் வரவேற்புரை நிகழ்த்தினார்கள்.

நமது சங்கத்தைச் சார்ந்த பொறியாளர்கள் மற்றும் பொறியாளர்களின் குடும்பத்தில் மறைந்தவர்களுக்காக இரங்கல் தெரிவித்து மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

மாநிலத் தலைவர் பொறியாளர் எம்.பஞ்சவர்ணம் அவர்கள் தன்னுடைய உரையில் சங்க செயல்பாடுகள் குறித்து விரிவாக விளக்கி பேசினார். பொதுச் செயலாளர் பொறியாளர் த. முருகேசன் அவர்கள் நமது சங்கப்பணிக்காக டெல்லி சென்றுள்ளதால் அன்னாருக்கு பதிலாக திரு. எஸ். கண்ணன் சட்டம் மற்றும் அமைப்பு செயலாளர் அவர்கள் பொதுச் செயலாளர் உரை நிகழ்த்துவார் எனவும் தெரிவித்தார்.

கூட்டத்திற்கு வந்திருந்த மையச் சங்க பொறுப்பாளர்களுக்கும், சிறப்பு அழைப்பாளர்களுக்கும், காஞ்சிபுரம் கிளை சார்பில் பொன்னாடைகள் அணிவித்து கௌரவித்தனர்.

சென்ற மையச் செயற்குழுக் கூட்ட நடவடிக்கைகள் மற்றும் தீர்மானங்களின் தற்போதைய நிலை குறித்து அமைப்பு மற்றும் சட்டச் செயலாளர் பொறியாளர் எஸ். கண்ணன் அவர்கள் அவைக்கு தெரிவித்து ஒப்புதல் பெற்றார்.

பொறி. எஸ். கண்ணன் அவர்கள் தன்னுடைய உரையில் மையச் சங்க நடவடிக்கைகள் குறித்து விரிவாக பேசினார். திரு. B. திருமால் மின்னியல் உதவி செயற்பொறியாளர் அவர்கள் தொடுத்த வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பில் சொல்லப்பட்ட கருத்தை அடிப்படையாக கொண்டு அரசாணை எண். 66 சம்பந்தப்பட்ட வழக்கில் உயர்நீதிமன்றம் நமக்கு பாதகமாக வழங்கப்பட்ட வழக்கை உச்ச நீதிமன்றத்தில் எப்படி எதிர்கொள்வது என்றும்,

அரசாணை எண். 1, 02.01.90க்கு விதித்திருத்தம் இல்லாத காரணத்தினால் விதித்திருத்தம் நிலுவையில் இருந்த நிலையில் **24.02.2006 (மாண்புமிகு அம்மா அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு வழங்கப்பட்ட பரிசு)** அன்று 21 தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு உதவிப் பொறியாளர் பதவி உயர்வு வழங்கப்பட்டது. மாற்று சங்கத்தினரால் தொடுக்கப்பட்ட வழக்கு 13.11.2014ல் case re-open செய்யப்பட்டு வழக்கு 23.12.2014 அன்று முடிக்கப்பட்டு 3 மாத காலத்திற்குள் விதித்திருத்தம் செய்யப்படவேண்டும் என்றும் அல்லது பதவி இறக்கம் செய்யப்பட வேண்டும் என தீர்ப்பு வழங்கப்பட்டது என்றும்,

இளநிலை பொறியாளர் பணிவரன்முறை 154 நபர்களுக்கு செய்யப்படவேண்டும் என்றும் அதற்கான ஆயத்தங்கள் முதன்மை தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் செய்யப்பட்டு வருவதாகவும்,

உதவிப் பொறியாளர் பணிவரன்முறை சம்பந்தமாக 2004, 2005 மற்றும் 2006 வரையிலான வரைதொழில் அலுவலர் மற்றும் மேற்கணிகர்களுக்கு குறிப்பு கேட்டு அனுப்பப்பட்டுள்ளது. விபரங்களை சம்பந்தப்பட்டவர்கள் உடனே அனுப்பி வைக்க கேட்டுக்கொண்டும்,

தேர்வாணையம் மூலம் இளம் பொறியாளர் தேர்ந்தெடுக்கப்பதற்கான விதித்திருத்தம் முன்னேற்றத்தில் இருப்பதாகவும் மற்றும் மொத்தம் 7 விதித்திருத்தங்கள் அனைத்தும் முன்னேற்றத்தில் இருப்பதாகவும்,

பணி ஆய்வாளர்களில் இருந்து தொழில்நுட்ப உதவியாளர்களாக பணி உயர்வு பெறுவதற்கான கோப்பு முன்னேற்றத்தில் இருப்பதாகவும் மற்றும் பணி ஆய்வாளர்களை வரைதொழில் அலுவலர்களாக பதவி உயர்வு வழங்கிட அன்னார்களின் விருப்பம் தெரிவிக்க கோப்பு அனைத்து மண்டலப் பொறியாளர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. அன்னார்களின் விருப்பத்தை பெற்று விரைந்து செயல்பட மண்டல செயலாளர்களையும், கிளைப் பொறுப்பாளர்களையும் கேட்டுக்கொண்டும்,

மின்னியல் உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு பட்டியல் 8 நபர்களுக்கு தமிழ்நாடு தேர்வாணையத்தில் DPC-ல் உள்ளது எனவும், மற்றும் உதவி செயற்பொறியாளர் (சிவில்) பட்டியலில் சுமார் 30 உதவி செயற்பொறியாளர்களை கட்டாய விடுப்பில் செல்ல சொல்லி சுமார் 43 பொறியாளர்களுக்கு உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் மகளிர் பொறியாளர்களை தவிர வேறு யாரும் இதுவரை உதவி செயற்பொறியாளராக பணி ஏற்று செய்து கொண்டதாக தெரியவில்லை எனவும், இது மிகவும் கண்டிக்கத்தக்கது என்றும் பேசினார்,

தொழில்நுட்ப உதவியாளர்களில் இருந்து 2008ல் சுமார் 29 பேருக்கு உதவிப் பொறியாளர் பதவி உயர்வு வழங்கப்பட்டது. அவர்கள் வழக்கை சந்திக்க ஒவ்வொருவரும் ரூ.15000/- (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) வழக்கு நிதியாக வழங்க வேண்டும் என்றும்,

நமது இல்லம் சிறப்பு செப்பனிட பணிகள் மேற்கொள்ள நன்கொடை ரூ. 1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) வழங்கவேண்டும் என்றும், வழக்கு நிதியை அனைத்து உறுப்பினர்களும் ரூ. 1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) வழங்க வேண்டும் என்றும் பேசினார்.

பாசனம் புத்தகங்கள் அனைத்து உறுப்பினர்களுக்கும் அனுப்பி வைக்கப்படும் அதற்குரிய பணத்தை அனுப்பி வைக்கவும் கேட்டுக்கொண்டார்.

அதனை தொடர்ந்து மூத்தப் பொறியாளர்கள் சி.ப.சண்முகம், தி.ப.பாலசுப்பிரமணியம், ஆர். வெங்கடசுப்பு, என். வெங்கட்ராமன் மற்றும் ஜி.பாலசுப்ரமணியன் ஆகியோர் நூற்றாண்டு விழா சிறப்பாக நடைபெற்றது குறித்தும் மற்றும் வழக்கினை எப்படி மேற்கொள்வது என்றும் உரையாற்றினார்கள்.

உணவு இடைவேளைக்கு பிறகு உறுப்பினர்கள் பொறியாளர்கள் ஏ.திருவேங்கடமூர்த்தி,விதித்திருத்த பிரதிநிதி-2, ஆர். வேதமூர்த்தி, தலைவர் தஞ்சாவூர் கிளை, டீ. அசோகன், தலைவர் கடலூர் கிளை, எஸ்.ஆர். சுப்ரமணியன், செயலாளர் தர்மபுரி கிளை, ஜி.விஜயகுமாரன், கடலூர் கிளை, எஸ்.ராஜன் பிரேம்குமார், செயலாளர் கோயம்பத்தூர் கிளை, சி. ராஜ், உபத்தலைவர் சிவகங்கை கிளை, என். சந்திரன், பொருளாளர் மதுரை கிளை, சி.பி.மோகன்குமார், செயலாளர் மதுரை கிளை, கே. ஆதிமூலம், செயலாளர் திருநெல்வேலி - தூத்துக்குடி கிளை எம்.தாணுமூர்த்தி, செயலாளர் கன்னியாகுமரி கிளை, கே. சிவகுமார், பொருளாளர் திருவாரூர் - நாகை கிளை, எஸ்.பொன்னுசாமி, தலைவர் கோயம்பத்தூர் கிளை, எஸ். பாண்டியன், பொருளாளர் சேலம் கிளை, ஜே. ரவீந்திரன், பொருளாளர் இராமநாதபுரம் கிளை, கே. ரவி, தலைவர் வேலூர் கிளை, D. சந்திரன்,

செயலாளர் வேலூர் கிளை ஆகியோர் கேள்விகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. முன்னால் மாநில தலைவர் ஜி. விஜயகுமாரன் அவர்கள் பேசுகையில் உறுப்பினர்களையும் அவர்களின் குடும்பத்தினரையும் சந்தோஷப்படுத்தவும் சங்கத்தின் பால் அவர்களை ஈர்க்கவும் அன்னார்களுக்கு பிறந்த நாளில் வாழ்த்துமடல் அனுப்பவேண்டும் எனவும், திருமணநாள் மற்றும் அன்னார் குழந்தைகளின் பிறந்த நாட்களுக்கு வாழ்த்து அனுப்பவும் கேட்டுக்கொண்டார். மற்றும் கணபதி கல்வி பரிசு திட்டம் பரிசு தொகையை பொறியாளர் சி.ப.சண்முகம் முன்னாள் பொதுச் செயலாளர் அவர்களும், முருகானந்தம் கல்வி பரிசு திட்டம் முதல் பரிசை பொறியாளர் என். வெங்கட்ராமன் முன்னாள் பொதுச் செயலாளர் அவர்களும், இரண்டாம் பரிசை பொறியாளர் கே. கமால்தீன் வெளியீட்டு செயலாளர் அவர்களும், மூன்றாவது பரிசை பொறியாளர் கே. ரவி தலைவர் வேலூர் கிளை அவர்களும் வழங்குவதாக ஒப்புக்கொண்டார்கள். வரும் கல்வி ஆண்டு 2015 - 2016 முதல் இத்திட்டம் அமலாக்கத்திற்கு வரும்.

பொறியாளர் ஜே. ரவீந்திரன், இராமநாதபுரம் கிளை அவர்கள் இளநிலை பொறியாளர்களுக்கு சிறப்பு ஊதியம் வழங்க கேட்டுக்கொண்டார். அது தற்சமயம் சாத்தியம் இல்லை என தெரிவிக்கப்பட்டது.

விதித்திருத்த நாயகர்கள் பொறியாளர் என். கணேசபிரகாஷ் மற்றும் ஏ.திருவேங்கடமூர்த்தி ஆகியோர் விதித்திருத்தம் பற்றி சிறப்புரை ஆற்றினார்கள்.

நிதிச் செயலாளர் பொறியாளர் ஆ.நடராஜன் அவர்களால் 14.11.2014 முதல் 30.01.2015 முடிய உள்ள காலத்திற்கான வரவு செலவு அறிக்கை அவைக்கு தாக்கல் செய்து பின் ஒப்புதல் பெறப்பட்டது.

பொங்கும் நிதிச் செயலாளர் பொறியாளர் என். புண்ணியகோட்டி அவர்கள் 01.11.2014 முதல் 31.12.2014 முடிய உள்ள காலத்திற்கான வரவு செலவு அறிக்கையை அவையில் தாக்கல் செய்து ஒப்புதல் பெற்றார்.

அதை தொடர்ந்து மண்டல செயலாளர்கள் R. தயாளகுமார் கிழக்கு மண்டல செயலாளர், D. சந்திரன் வடக்கு மண்டல செயலாளர், P. சசிகுமார் தெற்கு மண்டல செயலாளர், S. லீலாவதி மைய மண்டல செயலாளர் ஆகியோர் கிளை செயல்பாடுகள் குறித்து விவரித்தார்கள்.

மையச் செயற்குழுக் கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**தீர்மானங்கள்:**

1. 2008ல் தொழில்நுட்ப உதவியாளர்களில் இருந்து உதவிப் பொறியாளராக பதவி உயர்வு பெற்ற 29 நபர்கள் ரூ. 15,000/- (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) சிறப்பு வழக்கு நிதியாக தர வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.
2. இல்லம் சிறப்பு செப்பனிட ரூ. 1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) வீதம் அனைத்து உறுப்பினர்களிடமும் வசூல் செய்வது எனவும்,
3. அனைத்து உறுப்பினர்களும் ரூ. 1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) வீதம் வழக்கு நிதி வழங்க வேண்டும் எனவும்,
4. பாசன புத்தகம் ஒவ்வொரு உறுப்பினரும் வாங்க வேண்டும் எனவும், அதற்கு உரிய கட்டணம் ரூ. 300/- செலுத்த வேண்டும் எனவும்,
5. பொறியாளர்களை பணி மாற்றம் (Transfer) செய்யும் போது அதற்கு உரிய காலமான ஏப்ரல், மே, ஜூன் ஆகிய 3 மாதத்திற்குள் மாற்றம் செய்யப்பட வேண்டும் எனவும்,
6. பொறியாளர் ஒருவர் ஓய்வு பெற 1 வருடம் பணிகாலம் தான் இருக்கும் பட்சத்தில் அன்னாரை பணி மாற்றம் செய்யவேண்டாம் எனவும்,
7. தமிழ்நாடு பொதுப்பணித்துறைக்கு ஆலோசகர் பதவி அளித்ததற்கு வரவேற்றும் மற்றும் அது படிப்படியாக மாறி ஒரு IAS அதிகாரியை பணி நியமனம் செய்யவேண்டும் எனவும், தீர்மானம் நிறைவேற்றப்பட்டு காஞ்சிபுரம் கிளை சார்பாக தலைவர் பொறியாளர் என்.கிருஷ்ணன் நன்றி கூற, மையச்சங்கத்தின் சார்பாக நிதிச் செயலாளர் பொறியாளர் ஏ.நடராஜன் நன்றிகூற நாட்டுப்பண்ணுடன் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

## 31.01.2015 அன்று காஞ்சிபுரத்தில் நடைபெற்ற மைய செயற்குழுக் கூட்ட நிகழ்வுகள்.



31.01.2015 அன்று காஞ்சிபுரத்தில் நடைபெற்ற மைய செயற்குழுக் கூட்ட நிகழ்வுகள்.













## 31.01.2015 அன்று காஞ்சிபுரத்தில் நடைபெற்ற மைய செயற்குழுக் கூட்ட நிகழ்வுகள்.














## 31.01.2015 அன்று காஞ்சிபுரத்தில் நடைபெற்ற மைய செயற்குழுக் கூட்ட நிகழ்வுகள்.













Under Postal Regd No. TN/CH/(C)/358/15-17 & TN/PMG (CCR) WPP No.308/2015-17
Date of Posting 5th of Every Month. R.N.I. Registration No.R.33590/78.

**MARCH 2015**

# மையச் சங்க பொறுப்பாளர்கள் கூட்டம்

நாள் : 07.03.2015 சனிக் கிழமை காலை 10.30 மணி

இடம் : பொறியாளர் சி.ப.சண்முகம் அரங்கம்,
19/10, லால்முகமது தெரு,
சேப்பாக்கம், சென்னை - 5.

மையச் சங்க பொறுப்பாளர்கள், சிறப்பு அழைப்பாளர்கள் தவறாது கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

- தமிழ்நாடு பொறியியல் சங்கம்.

நமது சங்கத்தின் Website : www. tnengga. org
email id : tneapwd@yahoo.co.in

தந்தி பொறியாளர்
தொலைபேசி : சங்கம் : 28525786
இல்லம் : 28551993

**பொறியியல் கதிர்**
**PORIYIYAL KADHIR**

அனுப்புநர்:
தமிழ்நாடு பொறியியல் சங்கம்
சேப்பாக்கம், சென்னை - 600 005.
முகவரி சரியில்லையேல் திருப்பி அனுப்பவும்

Published on 03-03-2015
Postng on 06.03.2015

REGD. NEWS PAPER
POSTED AT EGMORE RMS1/ PATRIKA CHANNEL
POSTED WITHOUT PRE-PAYMENT SYSTEM

பெறுநர்

EDITED BY: Er. D. MURUGESAN, D.C.E, B.Tech, M.Tech, GENERAL SECRETARY, TNEA, PWD, CHEPAUK, CHENNAI-5.
PUBLISHED BY: Er. S. KANNAN, D.C.E. B.E., PUBLICATION SECRETARY, TNEA, PWD, CHEPAUK, CHENNAI-5.
PRINTED BY: Mr. K.P.THIYAGARAJAN AT KALAIYARAM PRINTERS, 182, BELLS ROAD, CHEPAUK, CHENNAI-5. PHONE: 2854 8223.